*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை-4*
*18 11 2025 TUESDAY 12 40 PM*

*ஆகாஷவாணி - செய்திகள் - தலைப்புச் செய்திகள்*

1. விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு நிதியுதவி திட்டம் விவசாயிகளுக்கு பெரிதும் பயனளிப்பதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

2. உலகளாவிய பெரும் புலிகள் உச்சி மாநாடு அடுத்த ஆண்டு இந்தியாவில் நடத்தப்படும் என்று மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. புபேந்தர் யாதவ் கூறியுள்ளார்

3. தில்லி கார் குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பாக Al-Falah பல்லைக்கழகத்துடன் தொடர்புடைய இடங்களில் அமலாக்கத்துறையினர் சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

4. பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் திருமதி. ஷேக் ஹசீனாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதற்கு, ஐ.நா. பொதுச்செயலாளர் திரு. ஆண்டனியோ குட்டரஸ் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

5. Deaflympic போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>>>><<<<<<

விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு நிதியுதவி திட்டம் விவசாயிகளுக்கு பெரிதும் பயனளிப்பதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள காணொலியில், தமிழகத்தின் கோவையில், நாளை நடைபெறும் நிகழ்ச்சியில் விவசாயிகள் வருவாய் ஆதரவு திட்டத்தின் 21வது தவணைத்தொகையை பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுவிக்கவுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடுமுழுவதும் உள்ள விவசாயிகளின் வங்கிக் கணக்கில் 18 ஆயிரம் கோடி ரூபாய் செலுத்தப்படவுள்ளதாக கூறியுள்ள திரு. சிவராஜ் சிங் சௌஹான், இந்த நிகழ்ச்சியில், விவசாயிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>>><<<<<<<

*மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், புதுதில்லியில் இன்று, மூலதனச் சந்தை சார்ந்த பங்குதாரர்களுடன் பட்ஜெட்டுக்கு முந்தைய ஆலோசனை நடத்தியுள்ளார்.*

*இந்தக் கூட்டத்தில் நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சௌத்ரி, பொருளாதார விவகாரங்கள் துறை செயலாளர் திருமதி. அனுராதா தாக்கூர், மத்திய அரசின் தலைமை பொருளாதார ஆலோசகர் திரு. அனந்த நாகேஸ்வரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.*

>>>>>>><<<<<<<

*உலகளாவிய பெரும் புலிகள் உச்சி மாநாடு அடுத்த ஆண்டு இந்தியாவில் நடத்தப்படும் என்று மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. புபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.*

*பிரேஸிலில், சர்வதேச பெரும் புலிகள் கூட்டணியில் இடம்பெற்றுள்ள நாடுகளின் அமைச்சர்கள் கூட்டத்தில் அவர் பேசினார்.*

*பெரும் புலிகளின் வாழ்விடத்தை பாதுகாப்பதன் மூலம், நீர்நிலைகளை பேணிக்காத்து, பேரிடர் அபாயங்களை குறைப்பதோடு, பருவநிலை மாற்றங்களை எதிர்கொண்டு, நீடித்த வாழ்வாதாரங்களை பாதுகாக்கவும் உதவிகரமாக இருக்கும் என்று அமைச்சர் தெரிவித்தார்.*

*இந்தியாவில் புலிகளின் எண்ணிக்கை 2 மடங்கு அதிகரித்துள்ளதாக கூறிய அவர், ஆசிய சிங்கங்களின் எண்ணிக்கையும் தொடர்ந்து அதிகரித்து வருவதாக தெரிவித்தார்.*

*உயிர் பன்மை மற்றும் பருவநிலை பாதிப்புகளை கட்டுப்படுத்த பாடுபடும் நாடுகளை சர்வதேச பெரும் புலிகள் கூட்டணியில் சேர்க்க இந்தியா முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும் திரு. புபேந்தர் யாதவ் கூறினார்.*

*>>>>>>><<<<<<<*

*நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை எட்டுவதில், இந்தியா குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேற்றம் அடைந்துள்ளதாக நித்தி ஆயோக் உறுப்பினர் திரு. வி.கே. பால் கூறியுள்ளார்.*

*ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் நீடித்த வளர்ச்சி தொடர்பான கூட்டத்தில் பங்கேற்றுப் பேசிய அவர், சமூகநலத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதோடு, உள்ளார்ந்த நிதி சேவைகள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, டிஜிட்டல் இணைப்பு வசதி உள்ளிட்ட துறைகளில் இந்தியா அடைந்துள்ள முன்னேற்றத்தை சுட்டிக்காட்டினார்.*

*பொருளாதார வளர்ச்சியும், சமூக மேம்பாடும் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.*

*வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் பணியில், நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் முக்கியப் பங்கு வகிக்கும் என்றும் திரு. வி.கே. பால் தெரிவித்தார்.*

*>>>>>>><<<<<<<*

*தில்லி கார் குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பான விசாரணையின் ஒரு பகுதியாக, ஃபரிதாபாதில் உள்ள Al-Falah பல்லைக்கழகத்துடன் தொடர்புடைய இடங்களில் அமலாக்கத்துறையினர் சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.*

*தில்லியை அடுத்த Okhla-வில் உள்ள அந்த பல்கலைக்கழகத்தின் தலைமையகம், Jamia நகரில் உள்ள கிளை அலுவலகம் உட்பட 25க்கும் அதிகமான இடங்களில் அதிகாரிகள் சோதனை மேற்கொண்டுள்ளனர்.*

*பல்கலைக் கழக அறக்கட்டளை நிர்வாகிகளுக்குச் சொந்தமான இடங்களிலும் சோதனை நடத்தப்பட்டு வருகிறது.*

*இதனிடையே, ஜம்மு கஷ்மீர் காவல்துறையினரும், குல்காமில் உள்ள டாக்டர் உமர் ஃபரூக்கின் இல்லம் உள்ளிட்ட 3 இடங்களில் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.*

*>>>>>>><<<<<<*

*அஸ்ஸாமில், வரும் ஜனவரி 1ஆம் தேதியை தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு, வாக்காளர் பட்டியலில் சிறப்பு திருத்தம் மேற்கொள்ள தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.*

*இதுதொடர்பாக, அம்மாநில தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு எழுதியுள்ள கடிதத்தில், வரைவு வாக்காளர் பட்டியல் அடுத்த மாதம் 27ஆம் தேதி வெளியிடப்பட்டு, அடுத்த ஆண்டு ஜனவரி 22ஆம் தேதிவரை திருத்தங்களை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*வாக்காளர் இறுதிப் பட்டியல், பிப்ரவரி 10ஆம் தேதி வெளியிடப்பட வேண்டும் என்று கூறியுள்ள தேர்தல் ஆணையம். தகுதியான எந்தவொரு வாக்காளரின் பெயரும் விடுபடாத வகையில், வாக்காளர் பதிவு அதிகாரிகள் பணியாற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளது.*

*>>>>>>><<<<<<*

*பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் திருமதி. ஷேக் ஹசீனாவுக்கு அந்நாட்டு நீதிமன்றம், மரண தண்டனை விதித்துள்ளதற்கு ஐ.நா. பொதுச்செயலாளர் திரு. ஆண்டனியோ குட்டரஸ் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.*

*ஐ.நா தலைமையகத்தில் செய்தியாளர்களை சந்தித்த அந்த அமைப்பின் செய்தி தொடர்பாளர் திரு. Stephen Tujaric, எந்தவொரு குற்றத்திற்கும் மரண தண்டனை விதிக்கப்படுவதை ஐ.நா தொடர்ந்து எதிர்த்து வருவதை சுட்டிக்காட்டினார்.*

*இந்த விசாரணை சர்வதேச சட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப, நியாயமாக நடைபெற்றதா என்பதில் ஐயப்பாடு உள்ளதாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையமும் தெரிவித்துள்ளது.*

*பங்களாதேஷ் நீதிமன்றத்தின் ஒருதலைபட்சமான56 வெளிப்படைத்தன்மையற்ற விசாரணை, தெற்காசியாவில் சட்டத்தின் ஆட்சிக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாக சர்வதேச ஊடகவியலாளர்களும் கருத்து தெரிவித்துள்ளனர்.*

*>>>>>>><<<<<<<*

*சவுதி அரேபியா பேருந்து விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு உதவும் வகையில், இந்திய தூதரகம் சார்பில் மதினாவில் முகாம் அலுவலகம் தொடங்கப்பட்டுள்ளது.*

*அந்நகரின் Al Masani பகுதியில் உள்ள இந்திய ஹஜ் யாத்ரீகர்களுக்கான அலுவலக வளாகத்தில், இந்த முகாம் செயல்படுவதாக தூதரகத்தின் சமூகவலைதளப்பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதனிடையே, இச்சம்பவத்தில் உயிரிழந்த தெலங்கானா மாநிலத்தை சேர்ந்தவர்களின் குடும்பத்தினருக்கு உதவுவதற்காக அம்மாநில சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. முஹமது அஸாருதீன் தலைமையிலான குழு ஒன்றும் சவுதி அரேபியா சென்றுள்ளது.*

இக்குழுவினர் இந்திய தூரதரக அதிகாரிகள் மற்றும் சவுதி அரேபிய அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொள்வார்கன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, நடப்பு நிதியாண்டின் இரண்டாவது காலாண்டில், சுமார் ஏழு புள்ளி ஐந்து சதவீதம் வளர்ச்சி அடையும் என்று பாரத ஸ்டேட் வங்கி தெரிவித்துள்ளது.

முதலீட்டு நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, கிராமப்புற நுகர்வு அதிகரிப்பு, சரக்கு மற்றும் சேவை வரி சீரமைப்பின் தாக்கமும் இந்த வளர்ச்சிக்கு முக்கிய காரணம் என்று அந்த வங்கியின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதத்தில் சரக்கு மற்றும் சேவை வரி வசூல் 2 லட்சம் கோடி ரூபாயைத் தாண்டி, புதிய உச்சத்தை அடையக்கூடும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

இலங்கைக்கு சுற்றுலா செல்லும் பயணிகளின் எண்ணிக்கையில், இந்தியர்கள் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளனர்.

இந்த ஆண்டு, இதுவரை 20 லட்சம் சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்தள்ளதாகவும்,

இவர்களில் 4 லட்சத்து 43 ஆயிரம் பேர் இந்தியர்கள் என்றும் அந்நாட்டு சுற்றுலாத்துறை தெரிவித்துள்ளது.

இது மொத்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையில் 22 புள்ளி ஐந்து சதவீதம் என்றும் கூறப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

*சர்வதேச கீதா மஹோத்சவத்தின் ஒரு பகுதியாக, காத்மாண்டுவில் உள்ள நேபாளத்திற்கான இந்திய தூதுரகம் சார்பில் சிறப்புக் கருத்தரங்கம் நடைபெற்றது.*

*"தற்கால உலகில் பகவத்கீதையின் முக்கியத்துவம்" என்ற தலைப்பில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் நேபாள சமஸ்கிருத பல்கலைக் கழகம் மற்றும் திரிபுவன் பல்கலைக் கழக பேராசிரியர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர்.*

*பகவத்கீதையில் இடம் பெற்றுள்ள பல்வேறு அம்சங்கள் தற்காலத்திற்கும் பொருந்துவதாக உள்ளது என்று பேராசிரியர் திரு . நாராயன் பிரசாத் கவுதம் தெரிவித்துள்ளார்.*

*>>>>>>><<<<<<<*

*மத்திய பிரதேசத்தில் இன்று குளிரின் தாக்கம் அதிகரிக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*சத்திஷ்கட், தெலங்கானா, ராஜஸ்தான், மஹாராஷ்ட்ர மாநிலங்களின் ஒரு சில பகுதிகளிலும் இதேநிலை காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*ஆந்திரா, கேரளா, தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்காலில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.*

*>>>>>>><<<<<<<*

*Deaflympic போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.*

*டோக்கியோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 10 மீட்டர் ஏர்ரைஃபிள் கலப்புக் குழுப் பிரிவில் இந்தியா இப்பதக்கங்களை கைப்பற்றியது.*

*>>>>>>><<<<<<<*

***கத்தார் ஓப்பன் Taekwondo போட்டியில் இந்தியாவின் Vaishnavee Pachota வெள்ளிப்பதக்கம் வென்றார்.***

*>>>>>>><<<<<<<*

***ஆஸ்திரேலிய ஓப்பன் பேட்மிண்டன் போட்டி இன்று சிட்னியில் தொடங்கியது.***

*>>>>>>><<<<<<<*

***உலக கோப்பை ஸ்குவாஷ் போட்டி, அடுத்த மாதம் 9ஆம் தேதி தொடங்கி 14-ஆம் தேதி வரை சென்னையில் நடைபெறவுள்ளது.***

***இந்தியாவின் ஜொஷ்னா சின்னப்பா, அனாகத் சிங், அபெய் சிங் மற்றும் வேலவன் செந்தில்குமார் இதில் பங்கேற்கின்றனர்.***

*>>>>>>><<<<<<<*